


டிசம்பர் 1, 2001 தொடங்கி, டிசம்பர் 1, 2003-க்கு முன்னதாக மொத்தம் இருபது தற்கொலைத் தாக்குதல்கள். ஒன்றுகூட புஸ்வாணமாகவில்லை. ஒருமுறை கூடத் தடுக்கப்படவில்லை. இஸ்ரேலியக் காவல் துறையினரால் ஒன்றுமே செய்யமுடியவில்லை.

யார் திட்டமிடுகிறார்கள்? யார் வடிவமைக்கிறார்கள்? இந்தக் களேபரத்துக்கெல்லாம் யார் பொறுப்பு? எல்லாவற்றையுமே, ஹமாஸ் மேலிடம்தான் முடிவு செய்யும் என்று எண்ணிக்கொண்டிருக்க முடியாது. ஹமாஸ் ஒன்றும் அல் காயிதா இல்லை. செய்வதை ஒழுங்காகச் செய் என்றுதான் மேலிடம் இங்கே சொல்லும். என்ன செய்யலாம் என்பதை முடிவெடுக்கப் பலபேர் இருக்கிற இயக்கம் அது.

தேடினார்கள். சல்லடை போட்டுத் தேடினார்கள். ஹமாஸின் ராணுவப் பொறுப்பாளர்களை அவர்களுக்குத் தெரியும். தளபதி யார், லெஃப்டினெண்டுகள் யார் யார், பிற முக்கியஸ்தர்கள் யார் என்று எல்லாம் தெரியும். ஆனால், தற்கொலைப் படைப்பிரிவின் அதிகாரி யார் என்பது மட்டும், 2003-ம் ஆண்டு வரை கண்டுபிடிக்கப்படவேயில்லை.
2004-ல் சுமார் ஏழு பேர் கொண்ட பட்டியலை வைத்துக்கொண்டு, இதற்குள் யாரோ ஒருவர்தான் என்கிற எல்லைக்கு வந்தார்கள். 2005-ல் அந்தப் பட்டியலில் இரண்டு பேர் மட்டும் இருந்தார்கள். 2006-ல்தான் உண்மை தெரியவந்தது.

அவர் பெயர் இப்ராஹிம் ஹமீத். மேற்குக் கரை வாசி. ரமல்லாவுக்கு அருகே சில்வாத் என்கிற கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர். மேற்குக் கரையில் வசிப்பவரானாலும் பி.எல்.ஓவைக் கண்டால், இப்ராஹிமுக்குப் பிடிக்காது. அதே சித்தாந்தம். இஸ்ரேலிடம் ஆட்சியைப் பிச்சை வாங்கிவிட்டார்கள் என்கிற கோபம். அதனாலேயே இப்ராஹிம், ஹமாஸில் இணைந்து பணியாற்றத் தொடங்கினார்.

தொண்ணூறுகளின் இறுதியில், ஹமாஸின் மிக முக்கியத் தலைவர்களுள் ஒருவரானார் இப்ராஹிம். அதன் ராணுவப் பிரிவு மேற்கொண்ட பல்வேறு தாக்குதல்களுக்கு மிகத் திறமையாக வடிவம் கொடுத்தது காரணம்.

ஹமாஸ், தற்கொலைப் பிரிவு என்று ஒரு புதுப்பிரிவைத் தொடங்கியபோது, போராளிகளுக்கு பயிற்சியளிக்க மறு யோசனையே இல்லாமல், இப்ராஹிமைத்தான் தேர்ந்தெடுத்தது. இப்ராஹிம் அசப்பில் ஒரு கணமும் புன்னகை செய்யாமல் இருக்கமாட்டார் என்று ஒரு தகவல் இருக்கிறது. (ஆனால் அவருடைய புகைப்படம் எங்கும் கிடையாது!) மிகக் கொடூரமான தாக்குதல் திட்டங்களைப் புன்னகையுடன், குரல் எழுப்பாமல், சற்றும் உணர்ச்சிவசப்படாமல் ஒரு மணிநேரம் கூட விளக்குவார்.

அதைச் செய்து முடித்த சுவடே இல்லாமல், மணிக்கணக்கில் இலக்கியமும் பேசுவார். இப்ராஹிமுக்கு பாரசீகக் கவிஞர் ஜலாலுத்தீன் ரூமியின் கவிதைகள் என்றால் மிகவும் இஷ்டம். இந்தக் கையில் கவிதைப் புத்தகம். அந்தக் கையில் துப்பாக்கி. என்ன பிரச்னை? ஒன்றுமில்லை. அதாவது, அவருக்கு.

இந்த ஆண்டு மே மாதம் முதல் வாரத்தில், இஸ்ரேலிய ராணுவத்துக்கு இப்ராஹிம் குறித்த விவரங்கள் கிடைத்தன. உளவுத்துறையின் மூலம், கிடைத்த விவரங்கள் உண்மைதான் என்று ஊர்ஜிதப்படுத்திக்கொண்டார்கள். எத்தனை தற்கொலைத் தாக்குதல்கள்!

ஜெருசலேம் பல்கலைக் கழகத்தில் இப்ராஹிம் ஒரு தற்கொலைத் தாக்குதலுக்கு ஏற்பாடு செய்திருந்தார். ஏராளமான அமெரிக்க மாணவர்கள் படித்துக்கொண்டிருந்த இடம். குறி சற்றும் பிசகாத தாக்குதல் அது. எழுந்த அலறலில் அமெரிக்க அதிபரே இஸ்ரேல் அரசைத் தொலைபேசியில் அழைத்து, என்ன ஆச்சு என்று விசாரிக்கும்படி ஆகிப்போனது. வேற்று தேசத்து மனிதர்களுக்கு ஒரு நாட்டில் அபாயம் உண்டானால், எழுகிற பிரச்னைகள் மிக அதிகம். பல பேருக்குப் பதில் சொல்லவேண்டியிருக்கும். விசாரணை பிராணனை வாங்கும். இரு தரப்பு ஒத்துழைப்பு என்கிற பெயரில், எல்லாத் தரப்பிலிருந்தும் குடைச்சல்கள் வரும்.

இப்ராஹிமுக்கு அதுதான் வேண்டியிருந்தது. கச்சிதமாகக் காரியத்தைச் செய்து முடித்தார். பலி எண்ணிக்கை பத்தோ, பன்னிரண்டோ. துல்லியமாக விவரம் தெரியாதுபோனாலும், பாதிப்பு மிக அதிகம். அதில் சந்தேகமில்லை.

அதே போலத்தான், இஸ்ரேலின் ஒரு பெட்ரோலியக் கிடங்கை வெடிக்கச் செய்ததும் ஒரு ரயில்பாதையை நாசப்படுத்தியதும்கூட.

கொத்துக்கொத்தாக யூதர்களை அழிப்பது என்பதுதான், ஹமாஸின் தொடக்ககாலத் தற்கொலைத்தாக்குதல்களுக்கு நோக்கமாக இருந்தது. இப்ராஹிம்தான், உயிர்ப்பலிகளைவிட, அதிர்ச்சியெழுப்பும் விதத்தில் காரியங்களை முடிப்பது அவசியம் என்ற நோக்கத்தில், ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்தது.
1998-ம் ஆண்டே ஒருமுறை இஸ்ரேலிய அரசு, இப்ராஹிம் ஹமீதைக் கைது செய்து சிறை வைத்தது. ஆனால், அவர் தலைவர்களுள் ஒருவர் என்கிற விவரம், அப்போது அவர்களுக்குத் தெரியாது. ஹமாஸின் போராளிகளுள் ஒருவர் என்று நினைத்துவிட்டார்கள். 2002-ம் ஆண்டு ஏதோ கொஞ்சம் எச்சரித்து விடுதலையும் செய்துவிட்டார்கள்.

அதன்பின் உள்ளூரிலேயே இருந்தும் இப்ராஹிம், அவர்கள் கண்ணில் படவே இல்லை. செய்தியில் வருகிற நபரும் இல்லை அவர். எனவே, எந்த வகையிலும் அவர் மீது இஸ்ரேலுக்குச் சந்தேகம் வராமலேயே இருந்தது.

2006-ன் தொடக்கத்தில்தான் கொஞ்சம் கொஞ்சமாக அந்தப் பெயர் அடிபடத் தொடங்கியது. ஹமாஸின் தாக்குதல்களில் திடீரென்று மேற்குக்கரை ஆட்கள் அதிகம் இடம்பெறுகிறார்களே, இது எப்படி? அது பி.எல்.ஓ கோட்டை அல்லவா? இங்கே ஹமாஸுக்கு எந்தத் தலை இருக்கிறது? அதுவும் இத்தனை ஆட்களைக் கவரும் விதத்தில்?

புரியவில்லை. எனவே, விசாரிக்கத் தொடங்கினார்கள்.

பாலஸ்தீன் அத்தாரிடியின் பிரதமராகப் பொறுப்பேற்றிருந்த இஸ்மாயில் ஹனியாவிடமும் துருவித் துருவிக் கேட்டுப் பார்த்தார்கள். ம்ஹூம். 'ஹமாஸ் இப்போதெல்லாம் தற்கொலைத் தாக்குதல்களில் இறங்குவதில்லை. நாங்கள் ஆளத் தொடங்கிவிட்டோம். எங்கள் கவனம் வளர்ச்சிப்பணிகளின் மீதுதான்' என்று ஒரே பாட்டைத்தான் அவர் வேறு வேறு ராகங்களில் பாடிக்கொண்டிருந்தார்.

ஆனாலும் இஸ்ரேலுக்கு நம்பிக்கை இல்லை. இப்போது ஹமாஸின் தற்கொலைப் படை எந்தக் காரியத்திலும் ஈடுபடவில்லை என்பது உண்மைதான். ஆனால், செய்தவற்றுக்கு யார் பொறுப்பு?

அது எதற்கு? ஆகவே, ஹனியா பதில் சொல்லவில்லை. பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார்கள். அதன்பிறகுதான், உளவுத்துறை ஆட்களை மேற்குக் கரைப் பகுதியில் இதற்கென்றே பிரத்தியேகமாக ஊடுருவவிட்டு இப்ராஹிமைக் கண்டுபிடித்தார்கள்.

41 வயதான இப்ராஹிம் ஹமீத்., கவிதைப் பிரியர். கொலைப் பிரியர். எப்படி இத்தனைநாள் கண்ணில் படாது போய்விட்டார்?

மே மாதம் 24-ம் தேதி அதிகாலை (அல்லது மே மாதம் 23-ம் தேதி நள்ளிரவு) இப்ராஹிமை அவரது சொந்த கிராமத்தில், சொந்த வீட்டில் சுற்றி வளைத்தது இஸ்ரேலியப் படை. அந்த இடத்திலிருந்து சரியாக முந்நூறு மீட்டர் தொலைவில்தான் பாலஸ்தீனின் அதிபர் மம்மூத் அப்பாஸின் வீடும் இருக்கிறது.
அதனாலென்ன? சுற்றி வளைத்தார்கள். பன்னிரண்டு ஜீப்புகள் நிறைய வீரர்கள். தவிரவும் ஒரு லாரி நிறைய அதிரடிப் படையினர். இரண்டு முக்கிய அதிகாரிகள்.
'திருவாளர் இப்ராஹிம் அவர்களே, நீங்கள் சுற்றி வளைக்கப்பட்டிருக்கிறீர்கள். மரியாதையாகச் சரணடைந்துவிடுவது உங்களுக்கும் உங்கள் வீட்டாருக்கும் வீட்டுக்கும் நல்லது. உங்களுக்கு ஐந்து நிமிடங்கள் அவகாசம் உண்டு. நீங்கள் வெளியே வராவிட்டால் வீடு இடிக்கப்படும். புல்டோசர் தயாராக இருக்கிறது. வீட்டுடன் சேர்த்து நீங்களும் நசுக்கப்படுவீர்கள்.'

- இப்படி லவுட் ஸ்பீக்கர் வைத்து அறிவித்தார்கள். சட்டென்று யோசித்தார்கள். அறிவிப்பு ஆங்கிலத்தில் செய்யப்பட்டது. ஒருவேளை, இப்ராஹிமுக்கு ஆங்கிலம் தெரியவில்லை என்றால்? உடனே ஓடிப்போய் அரபு மொழி பேசத் தெரிந்த ஒரு போலீஸ்காரரைக் கூட்டிக்கொண்டு வந்து, அதே செய்தியை மொழி பெயர்த்தும் அறிவித்தார்கள்.

ஆனால், ஐந்து நிமிடங்கள் கடந்தும் உள்ளிருந்து சத்தம் இல்லை. அசைவுகள் இல்லை. யாரும் இருப்பதற்கான அடையாளம் கூடத் தெரியவில்லை.

எனவே, ஓர் எச்சரிக்கை நடவடிக்கையாக, அந்த இரண்டு மாடிக் குடியிருப்பின் தரைத் தளத்தில் இருந்த ஒரு கடையின் இரும்பு ஷட்டரை, புல்டோசரால் தள்ளி நொறுக்க ஆரம்பித்தார்கள்.

கரகரகரவென்று ஷட்டர் கிழிக்கப்படும் ஓசை, பிராந்தியத்தின் அமைதியை அடியோடு குலைத்துப் போட்டது.

மீண்டும் காத்திருந்தார்கள். மீண்டும் அறிவித்தார்கள். அரை மணிநேரம் கழிந்தபிறகு, உள்ளே யாரோ இருப்பதற்கான முதல் அடையாளங்கள் தெரியத் தொடங்கின. நிழலாக ஒரு உருவம் நகர்ந்து போனமாதிரி இல்லை?

மீண்டும் எச்சரிக்கை மணி அடித்தது. 'இதுதான் இறுதி வாய்ப்பு. மரியாதையாகச் சரணடைந்துவிடுங்கள். இல்லாவிட்டால், விளைவு மிகவும் மோசமாக இருக்கும்.'

சாம்பல் நிற பேண்டும் வெளிர் நீலத்தில் சட்டையும் அணிந்த மனிதர் ஒருவர், உள்ளிருந்து இருளில் மெல்ல வெளியே வந்தார். உடனடியாக வீரர்கள் அவரைச் சுற்றி வளைத்துக்கொண்டார்கள். பாய்ந்து ஓடிச் சென்று அவரிடம் ஆயுதம் ஏதும் இருக்கிறதா என்று பரிசோதித்தார்கள்.

என்ன அபத்தம் இது? ஓர் ஆயுதம், இன்னொரு ஆயுதம் வைத்திருக்குமா என்ன?

அவர் முரண்டு பிடிக்கவில்லை. மறுப்பேதும் சொல்லவில்லை. ‘இப்போது நான் என்ன செய்யவேண்டும்?’ என்று கேட்டார்.

‘எங்களுடன் வரவேண்டும். அவ்வளவுதான்!’ இப்ராஹிம் உடன்பட்டார். உடனடியாக அவரது ஆடைகள் களையப்பட்டன. வெறும் அண்டர்வேர். அவ்வளவுதான். ஜீப்பில் ஏற்றப்பட்டார். மறுபுறம் இப்ராஹிமின் வீட்டுக்குள் நுழைந்த காவலர்கள், அங்குலம் விடாமல் தேடினார்கள். ஏதாவது இருக்கிறதா? புதிதாக ஏதும் கிடைக்குமா?

ஒரு ரோபாட் எடுத்துச் சென்றிருந்தார்கள். அசப்பில் மனிதனைப் போலவே இருக்கும் ரோபாட். வெடி பொருள்கள், குண்டுகள், துப்பாக்கிகள், வேறு ஆயுதங்கள் எது இருந்தாலும், எங்கே பதுக்கப்பட்டிருந்தாலும் தேடிப்போய் எடுத்துவிடும் ரோபாட். அந்த ரோபாட், இப்ராஹிம் வீட்டிலிருந்து இரண்டு பிஸ்டல்களை மட்டும் எடுத்துக் கொடுத்தது. வேறு ஆயுதம் ஏதுமில்லை என்று சொல்லிவிட்டது.

இப்ராஹிம் கைது செய்யப்பட்டுவிட்டார் என்கிற விஷயம் தெரிந்ததுமே, காஸாவில் பதற்றம் சூழ்ந்தது. போராளிகள் ஆங்காங்கே கூடி, அடுத்தகட்ட பதிலடி குறித்துப் பேச ஆரம்பித்தார்கள். எப்படியும் ஒரு பெரிய யுத்தம் வரத்தான் போகிறது என்று அவர்களுக்கு உள்ளுணர்வு சொன்னது.

நடந்திருப்பது அத்துமீறல். சந்தேகமில்லாமல் அத்துமீறல். ஹமாஸ் இன்றைக்குத் தீவிரவாதச் செயல் எதையும் புரிவதில்லை. மாறாக, பாலஸ்தீன் அத்தாரிடியின் ஆளும் கட்சியாக, மக்களின் பெரும்பான்மை நம்பிக்கையைப் பெற்று, ஆண்டுகொண்டிருக்கிறது. அதே மேற்குக் கரையில்தான் பிரதமர் இஸ்மாயில் ஹனியாவும் இருக்கிறார். அவருக்கு முறைப்படி ஒரு தகவல் கூடத் தராமல், இஸ்ரேல் உள்ளே புகுந்து கலாட்டா செய்திருக்கிறது. இதென்ன அக்கிரமம்?

மிகப்பெரிய அளவில் யுத்தத்துக்கான முஸ்தீபுகள் ஆரம்பமாயின. முதல் கட்டமாக, ஹனியாவே பதவி விலகுவார் என்றும் வதந்திகள் எழுந்தன. இதோ வெடிக்கப்போகிறது யுத்தம் என்று தினசரி செய்திகள் வரத்தொடங்கின.

ஆனால், ஹனியா மிகத் திறமையாக அந்த நெருக்கடியைச் சமாளித்தார். யுத்தமா? அதெல்லாம் இல்லை. ஹமாஸ் தன் எதிர்ப்பை அமைதியான முறையில் வெளிக்காட்டும். அடக்குமுறை நமக்குப் புதிதல்ல. அத்துமீறல் இஸ்ரேலுக்கும் புதிதல்ல.

ஆனால், உடனடியாக ஒரு காரியம் செய்தார்கள். காஸாவைக் காட்டிலும் மேற்குக் கரையில் இஸ்ரேல் ராணுவத்தின் ஊடுருவலும் கண்காணிப்பும் அதிகம். ஆகவே, மேற்குக் கரையில் வசிக்கும் ஹமாஸ் ஆட்கள் அத்தனை பேரையும் உடனடியாகத் தலைமறைவாகிவிடச் சொல்லிவிட்டார்கள். இது, இப்ராஹிமைத் தொடர்ந்து அந்தப் பிராந்தியத்தில் உள்ள அத்தனை ஹமாஸ் போராளிகளையும், அள்ளிக்கொண்டு போய்விடலாம் என்று கனவுகண்ட இஸ்ரேல் ராணுவத்துக்கு, மிகப்பெரிய அடியாக அமைந்துவிட்டது.
இஸ்ரேலியப் பிரதமர் இஹூத் ஓல்மர்ட்டுக்கு இன்றைய தலையாய தலைவலி இதுதான். ஆளும் கட்சியாகவும் இருக்கிறார்கள்; ஆளும் தீவிரர்களாகவும் இருக்கிறார்கள். ஒன்றும் செய்யமுடியவில்லை.

அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் இதற்குக் கொடுத்திருக்கும் யோசனை, ‘அதிபர் மம்மூத் அப்பாஸைத் தூக்கமுடியுமா பாருங்கள். ஹமாஸை ஒழிக்கமுடியாமல் அப்புறம் என்ன எதிர்க்கட்சி, எதிரிக்கட்சி’ என்று அலட்டல்?